# பட்டயம்

மலர் - 05 செப்டம்பர் - 2009 இதழ் - 11

Date of Issue : 01-09-2009

Place of Publication : 86 / 222H, Main Road,
Panagudi - 627 109.
Tirunelveli District, Tamil Nadu.

Volume : 5

Issue : 11 Price Per Copy : Rs.5.00




"WITH THY BLESSING LET THE HOUSE OF
THY SERVANT BE BLESSED FOR
EVER 2 SAM 7/29

## ஓசன்னா ஆலய வெளியீடு

www.hosannahchurch.org

"இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப் பண்ணுவேன்" (ஆகாய்2:7)

## BÞûL ù_TeLs

**1.** பொருளாதார சரிவின் நிமித்தம் சில ஆண்டுகளில் 10 லட்சம் பிறநாட்டுப் பணியாளர்கள் பிரிட்டனை விட்டு வெளியேறப் போகிறார்கள். ஜப்பானில் வேலையில்லாத் திண்டாட்டம் 5.4% ஆகும். அமெரிக்காவில் வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டிருக்கிறது. அமெரிக்கா, ஜப்பான், பிரிட்டன் நிலமைகள் இப்படி என்றால் பிற நாடுகளின் நிலமை எப்படியாகும் என்பது சொல்லமுடியாது. பூச்சக்கரமீதெங்கும் சோதனைக்காலம் வருமென்று வெளிப்படுத்தல் சொல்கின்றது. (வெளி 3/10) கர்த்தர்தாமே அவரை அண்டிக்கொள்ளுகின்ற பிள்ளைகளுக்குப் போக்கைக் கட்டளையிடுவாராக (Iகொரி 10/13) கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாராக (எபேசியர் 5/29)

**2.** கடைசிக் காலங்களில் அக்கிரமங்கள் பெருகிப் போகும். கொடுமைகள் பெருகும் என்று கர்த்தரின் வசனம் சொல்கின்றது. (மத்.24/13) (II தீ3/1) இந்தியாவில் அக்கிரமத்தில் முதல் மார்க் மஹாராட்டிராவும் இரண்டாவது மார்க் பீஹாரும் பெற்றுள்ளது. கர்த்தாவே! தீவிரவாதங்களைக் கட்டிப்போடும் (மத்18/18)

**3.** இந்தியாவில் 1997 முதல் இதுவரை 2 லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்துள்ளார்கள். ஜப்பானில் தற்கொலைகள் பெருகிக் கொண்டிருக்கின்றன. ஜனங்கள் இளைப்பாறுதல் தரும் கர்த்தரைப் பற்றுவார்களாக (மத்தேயு 11/28) தற்கொலையைத் தூண்டும் ஆவிகளைக் கட்டிப்போடும் (மத்.4/6)

**4.** மொழிப்பற்று தேவை. மொழி வெறியோ ஆகாது. பிறமொழிச் சொற்களையும் தேவையானால் பயன்படுத்தினால் மொழி வளர்ச்சி பெறும். உதாரணமாக, வீடியோ, கேமரா, லைப்ரரி போன்றவை இலத்தீன் மொழியிருந்து வந்தவை. பு□ன்பது பாரசீகச் சொல். பேம்பூ என்பது மலேசியச் சொல். புரோட்டீன் என்பது கிரேக்கச் சொல். தமிழில் பிறமொழிச் சொற்கள் பயன்படுத்தப்படுவதாக.

**5.** தமிழ் மொழியில் கீழ்க்கண்ட 8 உச்சரிப்புகளுக்கான புது எழுத்துக்கள் இவ்விதம் பயன்படுத்தப்படுவதாக.

1. ப (B)
2. ப (F)
3. க (G)
4. க (H)
5. ச (J)
6. ட (T)
7. ச (SH)
8. ச (CH)

| | | |
|---|---|---|
| **6.** கோலாலம்பூர் | பெட்ரோனாஸ் டவர் | 452 மீட்டர் |
| நியூயார்க் | எம்பயர் ஸ்டேட் பில்டிங் | 450 மீட்டர் |
| சீனா | ஜீன்மாவோ கட்டடம் | 420 மீட்டர் |
| நியூயார்க் | கிறிஸ்லர் பில்டிங் | 319 மீட்டர் |

உயரமான கட்டிடங்களில் இருந்து செய்யப்படும் தீவிரவாதங்கள், வானமண்டலப் பொல்லா ஆவிகளுக்குச் செய்யப்படும் மந்திரவாத பூஜைகள் யாவும் கர்த்தரால் கட்டிப்போடப்படுவதாக.

(ஆதியாகமம் 11/7) (எரேமியா 51/53) மந்திரவாத ஞானங்களை ஆண்டவர் பைத்தியமாக்கிப் போடுவாராக (Iகொரி 1/19,20)

**7.** பில்லியர்ட்ஸ் மேஜைக்கு 8 கால்கள் மிருகங்களுக்கு 4 கால்கள் மனிதனுக்கு 2 கால்கள் மட்டுமல்ல 2 கைகள்

காரணம் : 1. வேலை செய்யும்படி. (2தெச 3/10)

2. வேலை செய்து சாப்பிடும்படி. (சங் 128/2)
3. கர்த்தரைக் கும்பிட (மத் 28/9)
4. ஆண்கள் கரங்களை உயர்த்தி ஜெபிக்க
5. ஓசையுள்ள கைத்தாளங்களால் கர்த்தரைத் துதிக்க (சங்.150/5)
6. இசைக்கருவிகளால் கர்த்தரைத் துதிக்க (சங்.150/3,4)
7. ஏழைகளுக்கு இரங்கிட (நீதி. 31/20)
8. பிறரை வாழ்த்திட (லூக்.1/40)

கர்த்தாவே! என் கரங்களை இவ்வாறு பயன்படுத்தும்.

**8.** டால்பின் மீன்கள் நீந்தும் பொழுதே தூங்கும் வௌவால்கள் தொங்கியபடியே தூங்கும். கர்த்தாவே! என் நித்திரையிலும் உம் சத்தம் கேட்பதற்கென்று என் இதயம் விழித்திருப்பதாக. (உன்னதப்பாட்டு 5/2)

கர்த்தாவே! இராக்காலங்களில் என் உள்ளிந்திரியம் என்னை உணர்த்துவதாக. கர்த்தாவே! என் காதுகளில் உம் மெல்ய சத்தம், உம் பெருவெள்ள சத்தம், உம் எக்காள சத்தம் கேட்பதாக (Iஇரா 19/12) (வெளி 14/2) (வெளி 1/10)

**9.** நம்முடைய பிள்ளைகளுக்காக, ஆவிக்குரிய பிள்ளைகளுக்காக ஜெபிப்போம். யோபு ஜெபித்தது போல ஜெபிப்போம் (யோபு1/5). பிள்ளைகளை கர்த்தரிடத்தில் ஜெபத்தில் கொண்டு வருவோமாக (மத் 19/14).

பிள்ளைகளை கர்த்தர் வளர்த்தியிலும், ஞானத்திலும், தேவனை அறிகிற அறிவிலும், தேவ கிருபையிலும், மனுஷ தயவிலும், நாளுக்கு நாள் விருத்தியாக்குவாராக (லூக்கா.2/52). தேவன் தாமே தமது சித்தப்படியான பாதையில் தினமும் நடத்துவாராக (ஏசாயா 58/11)

**10.** பூமியனைத்திற்கும் இராஜா ஆண்டவர் இயேசு; பூமியைப் படைத்தவர் இயேசு; உலக இரட்சகர் இயேசு; உலகத்தை தாங்குபவர் இயேசு எனவே உலக ஜனங்கள் (240 நாடுகள்) யாவரும் இரட்சிக்கப்பட்டு மெய்தேவனைத் தொழும்படி வாஞ்சிக்க வேண்டும்.

சர்வசிருஷ்டிக்கும் ராஜ்யத்தின் சுவிசேஷம் அறிவிக்கப் படுவதாக. சத்தியம் உலகமெங்கும் பரவுவதாக. ஜனங்கள் கர்த்தரை அறிகிற அறிவில் வளர்வார்களாக. சுவிசேஷத்தை தடை செய்யும் இருளின் அதிகாரங்கள் முற்றிலும் கட்டிப்போடப்படுவதாக. ஜனங்களின் மனக்கண்கள் திறப்பதாக (IIகொரி 4/4) பூமியெங்கும் துதி முளைப்பதாக, நீதி முளைப்பதாக. பிதாவை எங்கும் தொழுகிற காலம் வருவதாக.

**11.** கீழ்கண்ட அண்டைநாடுகளில் சமாதானத்தைத் தாரும், கர்த்தாவே

1. இலங்கை
2. பாகிஸ்தான்
3. வங்கதேசம்
4. நேபாளம்
5. பூடான்
6. ஆப்கானிஸ்தான்
7. ஈராக்

**12.** எல்லா கிறிஸ்தவ சபைகளிலும் சத்தியம் போதிக்கப்பட ஜெபிப்போம்.

1. மனந்திரும்புதல்

2. இயேசு மேல் பக்தி
3. மனுஷன் மேல் அன்பு
4. ஞானஸ்நானம்
5. இராப்போஜனம்
6. பரிசுத்த அலங்காரம்
7. நல்லகனி கொடுத்தல்
8. தேவசித்தம் செய்தல்
9. கர்த்தரை மகிமைப்படுத்தல்
10. சுவிசேஷம் அறிவித்தல்
11. கர்த்தரை ஸ்தோத்திரித்தல்
12. கர்த்தரை ஆராதித்தல்
13. பரிசுத்த ஆவியால் ஆராதனை

**13.** சிங்கங்களின் வனவிலங்கு புகடம் கிர்காடு. காண்டாமிருகங்களின் வனவிலங்கு புகடம் காசிரங்கா. கிர்காடு குஜராத்தில் உள்ளது. காசிரங்கா அசாமில் உள்ளது.

கர்த்தாவே! உம்முடைய பிள்ளைகளாகிய
எங்களுக்கு நீரே புகடமாயிரும்
நீரே கோட்டையாயிரும்
நீரே அடைக்கலப்பட்டணமாயிரும்
நீரே கன்மலை வெடிப்பாயிரும்
நீரே மறைவிடமாயிரும்
நீரே வேயாயிரும்

**14.** பிபைன்ஸ் நாட்டில் மயோ என்று சொல்லப்படும் எரிமலை உண்டு. இது ஒவ்வொரு ஆண்டும் பல மைல் தூரத்திற்கு நெருப்புக் குழம்பைப் பீச்சி அடிக்கும். இதைப்போல சில பாவிகள் காணப்படுகிறார்கள். காரணமில்லாமல் கர்த்தரின் பிள்ளைகளிடம் தங்கள் கோபத்தை தூரத்திருந்தாலும் காட்டுவார்கள். கர்த்தாவே! துன்மார்க்கரின் மிஞ்சும் கோபம் எம் மேல் வராதபடி நீர் அவர்களை அடக்கிப் போடும். (சங்.76/10)

**15.** கீழ்க்கண்ட இடங்களில் உள்ள சாத்தனை கர்த்தர் கட்டிப்போடுவாராக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | மாத்தா வைஷ்னோதேவி | 11. | மதுரா | 21 | பாலக்காடு |
| 2. | அமர்நாத் | 12. | அலகாபாத் | 22. | புட்டபர்த்தி |
| 3. | பத்ரிநாத் | 13. | போத்கயா | 23. | சபரிமலை |

4. கேதாநாத்
5. அமிர்தசர்
6. பிர்லாமந்தீர்
7. ரிஷிகேஷ்
8. ஹரித்வார்
9. அயோத்தியா
10. வாரணாசி
14. கல்கத்தா
15. பூரி
16. கொணார்க்
17. அக்ஷர்தாம்
18. சோம்நாத்
20. நாசிக்
21. திருப்பதி
24. இராமேஸ்வரம்
25. சிதம்பரம்
26. மேலமருவத்தூர்
27. மதுரை
28. கன்னியாகுமரி

**16.** கீழ்கண்ட இடங்களில் கிறிஸ்தவர்களுக்கு விரோதமான செயல்களை கர்த்தர் கட்டிப் போடுவாராக.

1. இந்தியாவில் குஜராத், ஒரிஸ்ஸா, ஆந்திரா, தமிழ்நாடு
2. இந்தோனேஷியா
3. வடக்கு நைஜீரியா
4. சீனா
5. துருக்கி
6. சூடான்
7. இலங்கை
8. பாகிஸ்தான்
9. ஆப்கானிஸ்தான்

**17.** தமிழ்நாட்டின்

6,30,00,000 (630 லட்சம்) மக்கள்
30 மாவட்டங்கள்
206 வட்டங்கள்
16,309 இலாக்காக்கள்
6 பெருநகரங்கள்
481 சிறுநகரங்கள்
39 பாராளுமன்ற தொகுதிகள்
235 சட்டசபை தொகுதிகள்
390 மக்கள் கூட்டங்கள்
36 வகை பழங்குடிகள்
6% கிறிஸ்தவர்கள்
94% பிறமதத்தவர்கள்
51,000 பள்ளிகளில் பயிலும் மாணவர்கள்
இரட்சிக்கப்படுவார்களாக.

**18.** இம்மாநிலங்களில் உள்ள மதமாற்ற தடைசட்டம் மாறுவதாக.

a. குஜராத்
b. ஒரிஸ்ஸா
c. மத்தியபிரதேஷ்
d. ஹிமாசலபிரதேஷ்
e. அருணாசல பிரதேஷ்
f. ராஜஸ்தான்
g. சட்டீஸ்கார்

உலகில் மிகவும் ஏழை மாவட்டமாகக் காணப்படும் 20 மாவட்டங்களில் குஜராத்தில் டாங்ஸ் மாநிலம் உள்ளது. இந்தியாவில் மூன்றில் ஒருவர் ஒரு நாளைக்கு 12 ரூபாய் வருமானத்துடன் வாழ்கிறார்கள். இந்தியாவின் வறுமைகள் மாறுவதாக.

**19.** வனாந்தரத்தில் கொசு கிடையாது. ஆனால் இக்காலத்தில் நம் நகரங்களில் கொசுத்தொல்லை பெருகிப் போகிறதைப் பார்க்கிறோம். கொசுவால் மலேரியா, டென்கு போன்ற நோய்கள் வருகின்றன. ஈக்களால் 30 விதமான தொற்று நோய்கள் பரவுகின்றன.

உன் பாளயம் சுத்தமாயிருக்கக்கடவது என்பது கர்த்தரின் வார்த்தை (உபா.23/12,13,14). சுத்தக்குறைவினால் கொசு, மூட்டை, ஈக்கள், பேன்கள் பெருகுகின்றன. கர்த்தாவே! என்னை சுத்தமாக வைப்பேனாக. என் வீட்டைச் சுத்தமாக வைப்பேனாக. என் சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைப்பேனாக.

**20.** மூங்கில் ஒரு நாளில் 36 இஞ்ச் வரை வளருமாம். கர்த்தாவே! என்னை இவைகளில் நாளுக்கு நாள் வேகமாக வளரப் பண்ணும்.

1. தேவனின் பரிசுத்தம் (வெளி 22/11)
2. தேவனின் நீதிகள் (வெளி 22/11)
3. தேவனின் வல்லமை (எபேசியர் 6/10)
4. தேவனின் கிருபை (யோவான் 1/16)
5. தேவனின் ஞானம் (லூக்கா 2/52)
6. தேவனின் ஆவி (யோவான் 3/34)
7. தேவனின் பெலன் (Iகொரி 1/24)
8. தேவனின் சமாதானம் (யோவான் 14/27)
9. தேவனின் சந்தோஷம் (யோவான் 15/11)
10. தேவனின் சித்தம் செய்தல் (ரோமர் 12/2)

**21.** பிறந்த பிள்ளைக்கு 300 எலும்புகள் உண்டு. முழு மனிதனுக்கு 206 எலும்புகள் உண்டு. ஆனால் பிறந்த பிள்ளைக்கும் முழு மனிதனுக்கும் எவ்வளவோ வித்தியாசம்.

அதைப் போல பணம், பொருள், பதவி, பட்டம் என்பவற்றை அதிகமாக வைத்திருப்பது பெரிதல்ல. அவைகளைக் கொண்டு என்ன நன்மை செய்து கொண்டிருக்கிறாய்? என்பதே கேள்வி. கர்த்தாவே! எம்மை உமது கரத்தின் கருவியாய் எடுத்து பயன்படுத்தும் (IIதீ 2/21)

O LORD! USE ME TODAY AS YOUR TOOL ACCORDING TO YOUR WILL

**22.** ஒம்பிக் கொடியில் நீலம், பச்சை, மஞ்சள், சிவப்பு, கருப்பு என்னும் 5 நிறங்கள் உண்டு. இவற்றில் ஏதாவது ஒரு நிறம் எல்லா நாட்டுக் கொடியிலும் காணப்படும்.

இதைப் போல கர்த்தரின் பிள்ளைகள் என்று சொல்லிக் கொள்ளுகிற நம்மிடத்தில் கர்த்தரிடம் காணப்படும் ஏதாவது ஒன்று வெளியரங்கமாகத் தெரிய வேண்டும் என்று ஜெபிக்க வேண்டும்.

1. கர்த்தரின் பரிசுத்தம் (Iபேதுரு 1/16)
2. கர்த்தரின் ஞானம் (நீதி 1/2)
3. கர்த்தரின் சாந்தம் (மத் 11/29)
4. கர்த்தரின் தாழ்மை (மத். 11/29)
5. கர்த்தரின் ஆவி (ரோமர் 8/9)

**23.** பாரசீக மொழிச் சொற்கள் தமிழ் மொழியில் உபயோகத்தில் உள்ளன.
**உ.ம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ஜமீன் | 8. | தர்கா | 15. | தஸ்தாவேஜி |
| 2. | ஜமீன்தார் | 9. | கிஸ்மிஸ்பழம் | 16. | குஸ்தி |
| 3. | குமாஸ்தா | 10. | லுங்கி | 17. | வாபஸ் |
| 4. | சர்க்கார் | 11. | பீங்கான் | 18. | தயார் |
| 5. | பிஸ்தா | 12. | குங்குமம் | 19. | தயாரிப்பு |
| 6. | கெஜம் | 13. | புதினா | | |
| 7. | பஜார் | 14. | ரசீது | | |

தமிழ்மொழி உலகளவில் வளர்ச்சியடைவதாக தமிழ்மொழியில் அநேக ஆவிக்குரிய புத்தகங்கள் எழுதப்படுவதாக (யோவான் 21/25). சுவிசேஷம் உலகமெங்கும் பரவுவதாக (மத்.28/19).

**24.** உலகில் அதிக அளவு பேசப்படும் மொழிகள் இவைகள் (வரிசைப்படி)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | சீனமொழி | 6. | ஜெர்மன் | 11. | போர்த்துக்கீஸ் |

2. ஆங்கிலமொழி  7. ஜப்பான்  11. போர்த்துக்கீஸ்
3. ரஷ்யமொழி  8. வங்காளி  12. போர்ஷ்
4. இந்தி  9. பிரெஞ்  13. அராபி
5. ஸ்பானிஷ்  10. மலாய்

கர்த்தாவே! இந்த 13 மொழிகளிலும் கர்த்தரின் சத்தியம் அதிகமாக எழுதப்படுவதாக. சத்திய சுவிசேஷம் உலகமெங்கும் பரவுவதாக (மத் 25/13)

**25.** மழைநீரில் $B_{12}$ மறைந்துள்ளது. கண்ணீரில் சோடியம் குளோரைடு மறைந்துள்ளது. அதைப்போல் சாந்தம் என்னும் குணம் அமைதல் என்னும் ஆவியுள்ள குணம். நமக்குள்ளாகக் காணப்பட வேண்டும். இதுவே அழியாத அலங்கரிப்பு. இதுவே இருதயத்தில் மறைந்துள்ள குணம். இதுவே கடவுளின் பார்வையில் விலையேறப்பெற்றது (Iபேது 3/3-5)

கர்த்தாவே! கோபகுணம், எரிச்சல் குணம், மூர்க்க குணம், எடுத்தெறிந்து பேசும் குணம் மாற்றும். சாந்தம், நீடிய பொறுமை, அமைதல் தாரும்.

**26.** கைபர் கணவாயின் நீளம் 5 ஆயிரத்து 575 கி.மீ. ஆரியர்கள் இதன் வழியாக இந்தியாவுக்குள் வந்தார்கள். பிரெஞ்சுக்காரர்கள் பாண்டிசேரி வழியாக இந்தியாவுக்குள் வந்தார்கள்.

உலகமெங்கும் சிதறிப்போன யூதர்கள் மறுபடியும் இஸ்ரவேல் சேர்வார்கள். இந்தியாவில் உள்ள யூதர்களின் வாரிசுகளும் சீக்கிரம் இந்தியாவை விட்டு இஸ்ரவேலுக்குப் போய்விடுவார்கள் (எரே 32/37) (மத் 23/38) (மத் 24/2)

இது கடைசிக்காலம் என்பதற்கு ஒரு அடையாளம். அடையாளங்களைக் கண்டாவது மக்கள் மனந்திரும்புவார்களாக.

**27.** எரிநட்சத்திரம் வேறு. (யூதா 12). விடிவெள்ளி நட்சத்திரம் வேறு (வெளி.22/16). வால் நட்சத்திரம் வேறு. (மத்.2/2). நட்சத்திரம் வேறு. (தானி 12/3). அதைப் போல தற்காலிகமான பிரகாசத்தை வைத்து யாரையும் எடை போட முடியாது. கர்த்தரில் நிலைத்திருந்தால் மட்டுமே மிகுந்த கனிகள் தரமுடியும்; நிலைபெயராது தொடர்ந்து செயல்பட முடியும். (யோவான் 15/5,6). உம்மில் நிலைத்திருப்பேனாக. நட்சத்திரங்கள் போல் ஜொலிக்கப்பண்ணும் (தானி 12/3) (எபி11/12).

**28.** தேவாங்கின் கண்கள் அதன் மூளையைவிட பெரியது. அதைப் போல சில ஜனங்களின் கண்கள் மிகவும் இச்சிக்கின்றது. கண்களின் இச்சை, மாம்ச இச்சை, ஜீவனப்பெருமையில் சிக்கிக் கொள்கிறார்கள். அறிவு, ஞானம், புத்தி, தேவஞானம், மெய்ஞானம், பரத்திலிருந்து இறங்கி வருகிற ஞானம், மனுக்குல வாழ்வுக்கேற்ற கல்வி போன்றவைகளில் இவர்களுக்கு எண்ணமில்லை. போதை, சுகபோகம், மாய்மாலம், வேஷம், களியாட்டு, கற்பனையுலகம், உல்லாசம், சோம்பல், காரணமில்லா துக்கம் போன்றவைகளில் சிக்கிக் கொள்கிறார்கள். கர்த்தாவே என்னை சீர்படுத்தும் (1 யோ 2/16) (யாக் 3/17,18)

**29.** இதுவரை 610 வால்நட்சத்திரங்கள் (COMETS) கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும் என்ற தீர்க்க தரிசனத்தை (எண் 24/17) சாஸ்திரிகள் விசுவாசித்தார்கள். எதிர்பார்த்தார்கள்.

ஆண்டவர் பெத்லகேமில் எப்பொழுது பிறந்தாரோ அப்பொழுது அந்த வால்நட்சத்திரம் கிழக்கிலே தோன்றியிருக்கிறது. அதைப் பார்த்தவுடன் எருசலேமுக்கு கிழக்கிலிருந்து (ஒரு வேளை இந்தியாவிலிருந்தும் சென்றிருக்கலாம்) மேசியாவைத் தேடிச் சென்றார்கள். அவர்கள் கண்ட நட்சத்திரமே அவர்களுக்கு வழிகாட்டி முன்சென்றது (மத் 2/9) கர்த்தாவே! உம் தீர்க்கதரிசனங்களை விசுவாசிப்பேனாக; செயல்படுவேனாக. ஆமென்!

**30.** உலகிலே மிகவும் உயரமான வெண்கலச் சிலை சீனாவிலே ஜியாங் மாநிலத்திலே நிறுவப்பட்டுள்ள புத்தர்சிலையாகும். இதன் உயரம் 1200 அடி ஆகும்.

சிலைவழிபாடு, விக்கிரக வழிபாடு, சொரூப வழிபாடு, சித்திரந்தீர்த்த கல்வழிபாடு, மரித்த மனிதவழிபாடு, உயிருள்ள மனித வழிபாடு, கல்லறை வழிபாடு, பிசாசு வழிபாடு செய்யும் ஜனங்கள் ஒரே மனுஷஅவதாரமாக இயேசு என்ற பெயரில் வெளிப்பட்ட என்றென்றும் ஜீவனுள்ள கடவுளை வழிபடுபவர்களாக மனம் திரும்புவார்களாக. (லேவி 26/1) (யாத் 20/4) விக்கிரகங்கள் கட்டோடே ஒழிந்து போவதாக (ஏசாயா 2/18)

**31.** உலகிலே 18,606 வகையான பறவையினங்களை இயேசு படைத்துள்ளார் (ஆதி 1/20)

இவைகளில் புசியாமல் அருவருக்க வேண்டியவைகள் யாதெனில்

| | | |
|---|---|---|
| 1. கழுகு | 8. குருகு | 15. நாரை |
| 2. கருடன் | 9. கொக்கு | 16. நீர்க்காகம் |
| 3. கடலூராஞ்சி | 10. செமபுகம் | 17. ராஜாளி |
| 4. காகம் | 11. டேகை | 18. வல்லூறு |
| 5. கூகை | 12. தீக்குருவி | 19. வெளவால் |
| 6. கோட்டான் | 13. பருந்து | 20. ஆந்தை |
| 7. கூழக்கடா | 14. புழுக்கொத்தி | |

என்று லேவி 11 சொல்கிறது.

கர்த்தாவே! நலமானவைகளை ஜெபத்துடன் ஸ்தோத்திரத்துடன் புசிப்பேனாக (1 தீமோ 4/4,5)

**32.** எறும்பின் வாழ்நாள் 23 நாட்களே. ஆனாலும் அவைகளிடம் சுறுசுறுப்பும், ஒற்றுமை, உழைப்பு, பிரயாசம், ஒருமனம், ஒழுங்கு, ஒருமைப்பாடு, சளைப்பில்லாமை, வேகம், சேர்த்து வைத்தல் போன்ற சுபாவங்கள் காணப்படுகின்றன. (நீதி 6/6-8)

கர்த்தாவே! எறும்பைப் போல என்னை மாற்றும். கொஞ்ச நாட்கள் வாழ்ந்தாலும் என் நாட்களை நன்மைகள் செய்பவனாய் பயன்படுத்துவேனாக. காலத்தைப் பிரயோஜனப்படுத்துவேனாக.

எல்லா சோம்பல், சோர்வு, சப்பு, மனசோர்வு, நிலைவர மின்மை மாற்றும்.

**33.** இஸ்ரவேல் ஜனங்கள் 40 வருடம் வனாந்தரத்தில் நடந்ததை கற்பனை செய்து பாருங்கள். ஆப்பிரிக்கா பாலைவனங்களில் 60 கி.மீ. வேகத்தில் ஓடும் பாலைவனப்பூனைகள் உண்டு. பாலைவனப்பூனைகள் பறவைகளைப் பிடித்துத் தின்னும். பாலைவனத்தில் காக்டஸ் என்ற செடி வகைகள் உண்டு. பாலைவனத்தில் கொசுக்கள் கிடையாது. பாலைவனத்தில் தண்ணீர் கிடையாது. ஆனாலும் கர்த்தர் கன்மலையைப் பிளந்து தண்ணீரையும், வானத்திருந்து மன்னாவையும் தந்தார். அவர்கள் கால்கள் வீங்கவில்லை. அவர்கள் வஸ்திரம் பழசாகவில்லை (உபாகமம் 8/4)

கர்த்தாவே! அற்புதமாக எம்மை நடத்தும்.

**34.** வெட்டுக்கிளிக்கு விரோதமானது மைனா
பூச்சிகளுக்கு விரோதமானது சிலந்தி
பாம்புக்கு விரோதமானது கீரி
எலிக்கு விரோதமானது பூனை
புறாவுக்கு விரோதமானது பூனை
அதைப்போல தேவபிள்ளைகளுக்கு விரோதமானது சாத்தான்.
சாத்தனை தேவபிள்ளைகள் கட்டி ஜெபிக்க வேண்டும். (மத்.18/18)
தேவபிள்ளைகள் சாத்தானுக்கு இடம் கொடுக்கக்கூடாது (எபேசியர் 4/27)
தேவபிள்ளைகள் சாத்தானுக்கு ஜெபத்தில் எதிர்த்து நிற்க வேண்டும் (யாக் 4/7)

கர்த்தாவே! சாத்தான் மேல் வெற்றியருளும்.

**35.** இந்தக் கடைசிக் காலத்தில் அநேக ஜனங்கள் முட்டை, கோழி, இறைச்சி, பால், இனிப்பு போன்றவைகளை மிக அதிகமாக பயன்படுத்துகின்றனர். ஆனால் கீரை, முழுப்பயறு, சோயாபீன்ஸ் போன்றவைகளை எடுப்பதில்லை.

இரத்தக்குழாய்களில் கொழுப்புச் சத்து சேர்ந்து அடைப்பதைத் தவிர்க்கும் ஓமேகா - 3 சத்து கீரை, முழுப்பயிறு, சோயாபீன்ஸ் போன்றவைகளில் உண்டு.

மாம்ச பெருந்தீனிக்காரரோடே சேராதிருப்பேனாக (நீதி 23/2)

**36.** ஐ.நா. சபையில் 191 நாடுகள் அங்கத்தினர்களாக உள்ளனர். இந்தச் சபையின் கொடியில் ஆலிவ் இலை உள்ளது.

ஐ.நா. சபையில் உலகில் உள்ள எல்லா நாடுகளும் அங்கத்தினர் களாவார்களாக. இந்தச் சபை மூலம் உலக நாடுகளுக்கிடையே ஒற்றுமை உண்டாவதாக. எல்லைப்பிரச்சனைகள் பேச்சு வார்த்தையால் தீர்க்கப்படுவதாக. சர்வதேசக் குற்றங்கள் சரியாக நியாயம் விசாரிக்கப்படுவதாக.

ஐ.நா. சபையில் சுவிசேஷ அமைப்பு உருவாகுவதாக. சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷம் பரவுவதாக.

**37.** ஐந்தடி உயரமுள்ள மனிதனுக்குள் ஆண்டவர் 5 அடி நீள பெருங்குடலை, 25 அடி சிறுகுடல், 1 ஜான் வயிற்றை வைத்துள்ளார்.

போஜனத்துக்கு வயிறும் வயிற்றுக்கு போஜனமும் ஏற்கும். வயிறே கடவுள் என்று வயிற்றுக்காக மாத்திரம் வாழக்கூடாது. உணவுக்காக மாத்திரம் வாழக்கூடாது. ஆன்மா நித்திய ராஜ்யம் செல்லும்படி வாழ வேண்டும். ஆத்துமா நஷ்டப்படக்கூடாது.

கர்த்தாவே! போஜனப்பிரியனாய் மாறிப்போகாது இருப்பேனாக. கர்த்தாவே! உமக்காக வாழ்வேனாக.

**38.** சகாரா பாலைவனம் 84 லட்சம் சதுரகிலோ மீட்டர் பரப்பளவு உள்ளது. உலகில் எத்தனையோ பாலைவனங்கள் உண்டு. பாலைவனங்களிலேயும், மலைகளிலேயும், காடுகளிலேயும், ஆளில்லாத தீவுகளிலும், கடல்களிலேயும், ஆழங்களிலும் மறைந்திருந்து செயல்படும் தீவிரவாதிகள் பெருகிவரும் காலத்துக்குள் இருக்கிறோம். அக்கிரமங்கள் பெருகிக் கொண்டிருக்கிறது. (மத் 24/12)

கர்த்தாவே! பொல்லாத ஆவிகளுக்கும் பொல்லாத ஜனங்களுக்கும் தப்புவியும்.

**39.** இந்திய அட்டர்னி ஜெனரல்களை நியமிப்பவர் ஜனாதிபதி. எல்லாப் பக்தியோடும் ஜீவனம் பண்ணும்படிக்கு வாசல் திறக்கும்படி நல்ல தலைவர்கள் தாரும். நல்லொழுக்கத்தோடு ஜீவனம் பண்ணும்படிக்கு வாசல் திறக்கும்படி நல்ல தலைவர்கள் தாரும். தேசத்தில் தீவிரவாதங்களை அடக்கி அமைதல் உள்ள ஜீவனம் பண்ணுவதற் கேதுவான சூழ்நிலை உருவாக்க திறமை உள்ள தலைவர்களைத் தாரும்.

தேசத்தின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் தலைவர்களைத் தாரும் (I தீமோ 2/2)

**40.** இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் பாலம் ஆடம்ஸ் பாலம். அதைப் போல கடவுளையும் மனிதனையும் இணைக்கும் பாலமாக மனித அவதாரமாக வந்த தேவகுமாரன் இயேசு உள்ளார். இயேசுவே! மத்தியஸ்தர். இயேசுவே வழி. எல்லா நாமங்களுக்கும் மேலான நாமம் இயேசுவின் நாமம். இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோர் யாவர் முழங்காலும் முடங்கும்.

கர்த்தாவே! இயேசுவே! உம்மைப் பற்றுவேனாக. உறுதியாய் பற்றுவேனாக. ஜெயமெடுப்பேனாக. ஆமென்!

**41.** அமெரிக்காவில் 32LA இந்தியர்கள் வாழ்கிறார்கள். அமெரிக்க மருத்துவர்களில் 38% இந்தியர்கள். அமெரிக்க நாசாவில் 36%

இந்தியர்கள். கர்த்தாவே! இந்தியாவை ஆசீர்வதியும். இந்தியர்களை ஆசீர்வதியும். இந்தியர்கள் புகழ் உலகெங்கும் பரவுவதாக.

**42.** கர்த்தருடைய புத்தகத்தில் ஆப்பிள் மரம் (கிச்சிலி) சொல்லப் பட்டுள்ளது. காட்டுமரங்களுக்குள் கிச்சிலிமரம் விசேஷமானது போல கர்த்தர் நேசர்கள் எல்லாரிலும் விசேஷமானவர். மரநிழலிலே வாஞ்சையாய் அமர்வது போல கர்த்தர் நிழலிலே அமர வேண்டும். கிச்சிலிப்பழம் போலே கர்த்தரின் வசனம் நம்மை ஆற்ற வல்லது.

கன்னிமரியாள் இயேசுவை சத்திரத்தின் தொழுவ அருகில் உள்ள கிச்சிலிமரத்தின் கீழ் பெற்றெடுத்து முன்னணையில் கிடத்தினாள்.

கர்த்தாவே! உம் நேசம், உம் நிழல், உம் வார்த்தை கிடைப்பதாக. (ஆப்பிளில் 7100 வகைகள் உண்டு)

**43.** கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு காண்டாமிருகத்துக்கு ஒத்த பெலனைத் தரவல்லவர் என்று வசனம் சொல்கிறது (எண்.23/22). காண்டாமிருகம் 10 அடி நீளம், 5 அடி உயரம், 3 விரல் கொண்ட குட்டையான கால்கள். 6000 பவுண்டு எடை உடையது.

கர்த்தாவே! காண்டாமிருகத்துக்கொத்த பெலன் தாரும். தேவபெலனருளும். ஆவியானவரே உம் பெலனருளும். ஆவியானவரே! பட்டயத்தோடு கடந்து வந்து யுத்தம் பண்ணி வலுசர்ப்பத்தின் மேல் வெற்றியருளும்.

**44.** உலகிலேயே அதிக வயது உடைய மரம் அமெரிக்காவில் கலிபோர்னியாவில் உள்ளது. வயது 3000. உயரம் 354 அடி. சுற்றளவு 54 அடி. கிளையின் நீளம் 140 அடி கொண்டது.

மரங்களைக் காட்டிலும் அதிக வயதுள்ளவைகள் அசுத்த ஆவிகள். இவைகளை தள்ளப்பட்ட தூதர்கள் என்றும் காட்டு ஜீவன்கள் என்றும் காட்டு மிருகங்கள் என்றும் அகங்காரமுள்ள ஜீவன்கள் என்றும் பிசாசும் அவனைச் சேர்ந்த தூதர்கள் என்றும் வசனம் சொல்கிறது.

இவைகள் ஆதியிருந்த பூமியிலே தள்ளப்பட்டன. பூமியிலே வெளிச்சம் உண்டாக்கப்படுமுன்னே இவைகள் பூமியில் தள்ளப்பட்டன. இவைகளின் வயது இவ்வளவு என்று சொல்ல முடியாது. இவைகளை விருட்சங்கள் என்றும் வசனம் சொல்கிறது. இவைகள் மேல் வெற்றி தாரும் கர்த்தாவே.

**45.** கர்த்தாவே **சகல விருட்சங்களையும் அலட்சியம் பண்ணும் உமது கோலை** அனுப்பும். சகல விருட்சங்கள் மேலே எமக்கு வெற்றி உண்டாவதாக. (எசே.21). உமது சத்தம் சகல விருட்சங்கள் மேலே வெற்றி அளிப்பதாக.

கர்த்தருடைய சத்தம் கேதுருமரங்களை முறிப்பதாக. கர்த்தருடைய சத்தம் லீபனோனின் கேதுருமரங்களை முறிப்பதாக.

கர்த்தருடைய சத்தம் காடுகளை வெளியாக்குவதாக (சங் 29/9)

காட்டின் அடர்த்தியைக் **கோடாரியால்** வெட்டிப்போடும் கர்த்தாவே! (ஏசாயா 10/34) (பிர 11/3). **மிகாவேலையும்** அவனைச் சேர்ந்த **தூதர்களையும்** அனுப்பி யுத்தம் செய்யும் (வெளி 12/7)

**46.** ஆஸ்ட்ரிச் பறவைகளின் கண்கள் அவைகளின் மூளையை விட பெரியது.

அதைப் போல ஒரு மனிதன் தன் கண்களை இச்சைக்கு ஒப்புக் கொடுப்பானாகில் அவன் மாம்சமும் இச்சையில் ஜீவிக்கும். அவன் சிந்தை மாம்ச சிந்தையாய் மாறிவிடும். மாம்ச சிந்தை மரணம் என்று வசனம் சொல்கிறது. மாம்ச சிந்தை உள்ளவர்கள் மாம்சத்துக்கடுத்த வைகளையே சிந்திப்பார்கள். மாம்சத்துக்கடுத்தவைகளுக்காகவே பிரயாசம் எடுப்பார்கள். கர்த்தருக்கடுத்தவைகளையோ மனுஷ நன்மைக்கடுத்தவைகளையோ, ஞானத்துக்கடுத்தவைகளையோ அவர்கள் சிந்திக்க மாட்டார்கள்.

கர்த்தாவே! என் கண்களைச் சுத்தமாக்கும். மாம்சசிந்தை யுள்ளோர் மேற்கொள்ளாது கட்டிப்போடும் கர்த்தாவே.

**47.** கோழி முட்டையை வேக வைக்க 5 நிமிடம் ஆகும். ஆஸ்ட்ரிச் முட்டையை வேக வைக்க 40 நிமிடம் ஆகும்.

அதைப் போல சில ஜனங்கள் சத்தியத்தைக் கேட்ட உடன் மனந்திரும்புவார்கள். சிலர் 40 வருடம் கழித்தும் திரும்பலாம்.

எனவே வேதவசனத்தை விதைப்பதற்குத் தயங்கக் கூடாது. விதைக்கிறவன் காற்றைக் கண்டு (பிசாசைக் கண்டு) பயப்படக்கூடாது. (பிரசங்கி 11/4). விதைக்கிறவர்கள் தொடர்ந்து விதைக்கப்பட்ட ஆத்மாக் களுக்காக ஜெபிக்க வேண்டும். (பிரசங்கி 11/8)

கர்த்தாவே! உம் சத்தியத்தை விசுவாசத்தோடு தொடர்ந்து விதைப்பேனாக.

**48.** பைபிளில் உப்பைப் பற்றி 30 முறை குறிப்பிடப்பட்டுள்ளது. பூமிக்கு

உப்பு எப்படி உள்ளதோ அதைப் போல என்னைப் பிரயோஜனம் உள்ளவனாக்கும்.

உப்பானது உணவுக்குச் சுவையைக் கொடுப்பது போல என்னை பிறருக்கு நன்மை செய்பவனாக்கும்.

உப்பானது தன்னை வெளியே காட்டாது மறைந்திருந்து செயல்படுவது போல நான் மனுஷனின் புகழ்ச்சியை விரும்பாதிருப்பேனாக. உப்பானது தன்னைக் கரைந்திட ஒப்புக் கொடுப்பது போல நான் என்னை ஜீவபலியாக ஒப்புக் கொடுத்திட நினைப்பேனாக.

**49.** கங்காருகுட்டி பிறக்கும் பொழுது 1 அங்குல நீளமானாலும் வளரும் போது எவ்வளவு பெரியதாகிறது?

கர்த்தாவே! ஆவிக்குரிய ஜீவியத்தில் என்னை மிகவும் வளரப்பண்ணும்.

ஞானத்தில் என்னை வளரப்பண்ணும் (லூக்கா 2/52)
பரிசுத்தத்தில் என்னை வளரப்பண்ணும் (வெளி 22/11)
கிருபையில் என்னை வளரப்பண்ணும் (யோவான் 1/16)
வல்லமையில் என்னை வளரப்பண்ணும் (எபேசியர் 6/10)
தேவ பலத்தில் என்னை வளரப்பண்ணும் (Iகொரி 1/24)
தேவ சித்தம் செய்வதில் என்னை வளரப்பண்ணும் (ரோமர் 12/2)
அன்பு கூருவதில் என்னை வளரப்பண்ணும் (Iயோவான் 4/12)
விசுவாசத்தில் என்னை வளரப்பண்ணும் (லூக்கா 17/5)
கற்பில் என்னை வளரப்பண்ணும் (Iதீ 4/12)

**50.** நாய் கட்டாயம் குரைக்கும் ஆனால் டிஸ்காஸ் என்னும் ஒரு வகை ஆஸ்திரேலிய நாய் குரைப்பதில்லை.

அதைப்போல் சில கிறிஸ்தவர்கள் குரைப்பதில்லை (சுவிசேஷம் சொல்வதில்லை)

கர்த்தாவே! சுவிசேஷம் அறிவியாவிட்டால் ஐயோ என்று எச்சரித்துள்ளீரே (Iகொரி 9/16) கர்த்தாவே! எக்காளம் ஊதுபவனாக்கும். எச்சரிப்பின் சத்தம் போடுபவனாக்கும். உம் ஆலயத்தில் உம் எச்சரிப்பின் சத்தம் தொனிப்பதாக.

**51.** மெலனின், கரோடின், ஹீமோகுளோபின் அளவின்படி மனிதனின் நிறம் மாறுகிறது.

இதைப்போல மனிதனுக்கு 3 காரியம் தேவையாயிருக்கிறது. அவைகள் அன்பு, பலம், பரிசுத்தம். அன்பு உடையவனாயிருந்து பலம், பரிசுத்தம் இல்லாவிடில் பலனில்லை...

பலம் உடையவனாயிருந்து அன்பு, பரிசுத்தம் அற்றவனாயிருந்தால் பயனில்லை. பரிசுத்தம் உடையவனாயிருந்து அன்பு, பலம், இல்லாவிடில் பலனில்லை. கர்த்தாவே எம்மை அன்பு, பலம், பரிசுத்தம் மூன்றால் நிரப்பும்.

**52.** நிறங்களுக்கும் பரிசுத்தத்திற்கும் சம்பந்தமில்லை. வெண்வஸ்திரம் போடுவது தவறு அல்ல. ஆனால் வெண்வஸ்திரம் மட்டுமே போட வேண்டும் என்பது தவறு. உன் வஸ்திரம் வெண்மையாக இருக்கக்கடவது என்பது சுத்தத்தையும் இதய சுத்தத்தையும் சுத்திகரிப்பையும் குறிக்கும்.

இந்தியாவில் – துக்கத்துக்கு அடையாளம் கருப்பு

சீனாவில் – துக்கத்துக்கு அடையாளம் வெள்ளை

துருக்கியில் – துக்கத்துக்கு அடையாளம் நீலம்

எகிப்தில் – துக்கத்துக்கு அடையாளம் மஞ்சள்

கர்த்தாவே! நிறம் என்கிற மனுஷகற்பனையில் விழாதிருப்பேனாக. உடல் சுத்தம், மன சுத்தம், கண்சுத்தம், ஆவி சுத்தம், ஆத்ம சுத்தம், இதய சுத்தம் தாரும்.

**53.** பிரெஞ்சு நாட்டவர்கள் கிறிஸ்மஸ் தினத்தை NOEL என்பார்கள். YULE என்றாலும் கிறிஸ்மஸ் என்று அர்த்தம். சில கிறிஸ்தவர்கள் கிறிஸ்மஸ் கொண்டாடுவது தவறு என்கிறார்கள். THE FIRST NOEL (முதல் கிறிஸ்துமஸ்) எவ்வளவு மேன்மையாக தூதர்களால், மேய்ப்பர்களால், யோசேப்பால், மரியாளால் கொண்டாடப்பட்டது என்பதைப் பாருங்கள். கர்த்தருடைய மகிமை வெளிப்பட்டது. துதி எழும்பியது. தேவ தூதர்கள் தொழுதார்கள். மேய்ப்பர்கள் தொழுதார்கள் (லூக்கா 2) (எபி 1/6). நாமும் ராஜாதி ராஜாவின் பிறந்த நாளைக் கொண்டாடி அவர் நாமத்தை மகிமைப் படுத்த வேண்டும். கர்த்தாவே உம்மைக் கொண்டாடுவேனாக. (சங் 148/14)

**54.** ரஷ்யாவில் கானால் பகுதியிலே ஒரு மியூசியம் உள்ளது. அதில் பல நாட்டுப் பேய்களின் சிற்பங்கள், ஓவியங்கள், பேய்கள் பயன்படுத்திய பொருள்கள் காணப்படுகின்றன. நேபாளில் இப்படிப்பட்ட இடம் உண்டு. நியூயார்க்கிலும் உண்டு.

வெளி 18/2 மகாபாபிலோன் என்பது பேய்களின் குடியிருப்பு, அசுத்த ஆவிகளின் காவல்வீடு, அசுத்த பறவைகளின் கூடு என்கிறது.

பாபிலோன் விழுந்து போவதாக (வெளி 18/2). பாபிலோன் முழுகிப் போவதாக (எரே 51/64).

**55.** சிலந்தி ஞானமுள்ளது என்று கர்த்தரின் வார்த்தை சொல்கின்றது. தோல்வியைக் கண்டு துவள்வது இல்லை. அதன் வயிற்றில் 6 சுரப்பிகள் உண்டு. அதற்கு 8 கண்கள் உண்டு. அதன் இதயம் குழாய் வடிவமுடையது. அதன் இரத்தம் நீலநிறமாயிருக்கும். சிலந்திகளில் 35000 இனங்கள் உண்டு. சிலந்தி போக முடியாத இடமில்லை. அரசர் மாளிகைக்கும் போகின்றது. கர்த்தாவே! சிலந்தியைப் போல சுறுசுறுப்பு, வேகம், தளராமுயற்சி உள்ளவனாக்கும் (நீதி 30/28).

**56.** பாக்கள் 4 வகைப்படும்.

1. வெண்பா – செப்பலோசை உடையது
2. அகவற்பா – அகவலோசை உடையது
3. க ப்பா – துள்ளலோசை உடையது
4. வஞ்சிப்பா – தூங்கலோசை உடையது

கர்த்தாவே! உம் சத்தியம் பாக்களால் பாடப்படுவதாக. சத்தியத்தை அறிகிற அறிவிலே வளரப்பண்ணும் (1தீ. 2/4). சத்திய சுவிசேஷம் பரவுவதாக. சத்தியம் எம்மை விடுவிப்பதாக. (யோ8/32)

**57.** உலகப் பரப்பளவில் 35% பசிபிக் கடல். இக்கட அநேக தீவுகள் உள்ளன. இந்தோனேசியாவில் 13 ஆயிரம் தீவுகள் உள்ளன. கர்த்தாவே உலகத்தின் கடையாந்திரம் வரைக்கும் உம் வசனம் பரவுவதாக. தீவார் கர்த்தரை அறிகிற அறிவை அடைவார்களாக. (ஏசாயா 42/4). கர்த்தாவே! தீவுகளில் மறைந்திருந்து செயல்படும் தீவிரவாதங்கள் பிடிப்படுவதாக. (ஏசாயா 1/31). கர்த்தாவே! கடைசிக் கால தீவிரவாதங்கள் சபைக்கு விரோதமாய் வாய்க்காமல் போவதாக.

**58.** கனடா நாட்டில் 1925ல் பயங்கர குளிரில் நயாகரா அருவியே உறைந்து போனதாம். கர்த்தருடைய குளிருக்கு முன்பாக நிற்பவன் யார்? என்று கர்த்தரின் வசனம் சொல்கின்றது (சங் 147/17). கர்த்தரின் கோபத்திற்கு முன்பாக எவனும் நிற்க முடியாது (நாகூம் 1/6). கர்த்தரின் அக்கினிக்கு முன்பாக எதுவும் நிற்க முடியாது (ஏசாயா 10/17). கர்த்தரின் சத்தத்திற்கு முன்பாக எதுவும் நிற்க முடியாது (சங்.29). கர்த்தாவே உம் ஆவி, வார்த்தை, வெளிச்சம், குளிர், சத்தம், அக்கினியால் அசுத்த ஆவிகளை அடக்கிப் போடும்.

# புதியவெப்ஸைட்

I 1. VISIT OUR NEW WEBSITE
(எங்கள் புதிய வெப்ஸைட்டை அணுகவும்)

2. WEBSITE ADDRESS IS www.hosannahchurch.org
(இணையதள முகவரி : www.hosannahchurch.org)

3. FEATURES INSIDE (உள்ளே)

1. PRAYERS IN ENGLISH (ஆங்கிலத்தில் ஜெபங்கள்)
2. PRAYERS IN TAMIL (தமிழில் ஜெபங்கள்)
3. DAILY BREAD (ENG) (அனுதின மன்னா – ஆங்கிலம்)
4. YOUTH PAGE (வாலிபர் பகுதி –ஆங்கிலம்)
5. MESSAGE FOR THE WEEK (வார செய்தி - ஆங்கிலம்)
6. THOUGHT FOR TODAY (இன்றைய சிந்தனை துளிகள் –ஆங்கிலம்)
7. PROMISE GALLERY (ENG) (வாக்குத்தத்தங்கள் –ஆங்கிலம்)
8. PROPHETIC PAGE (தீர்க்கதரிசன பக்கம்)
9. PRAYER POINTS (ஜெபக்குறிப்புகள்)
10. FREQUENTLY ASKED QUESTIONS
(அடிக்கடி கேட்கப்படும் கேள்வியும் பதிலும்)

---

அக்டோபர் 17 – ம் தேதி சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை ஓசன்னா ஆலயத்தில் வைத்து பெண்கள் எழுப்புதல் ஜெபம் நடைபெறும். ஜெபித்து பங்கு பெறுங்கள்.

---

FATHER SON HOLY SPIRIT
PANAGUDI HOSANNAH CHURCH

PRAY TO GOD KNOW GOD LOVE GOD
LOVE MAN KNOW MAN PRAY FOR MAN

**Dr. பிரின்ஸ்டன் ஜாய்,** M.B.B.S.,
**Dr. சூசன் பிரின்ஸ்டன்,** M.B.B.S.,
ஓசன்னா ஆலயம், **ஜாய் ஆஸ்பத்திரி,**
**பணகுடி** – 627 109, **தமிழ்நாடு.** ☎ : (954637) 245273
WEB: www.hosannahchurch.org